RESEARCH ARTICLE

INDIAN JOURNAL OF TAMIL

DOI: 10.54392/ijot2214

# ஆலயங்களில் ஓதுவார் மரபு-இலங்கையில் இருக்கும் சைவ ஆலய மரபினை அடிப்படையாகக் கொண்ட பண்பாட்டு இசையியலாய்வு

**சுகன்யா அரவிந்தன்** [அ, *]

[அ] இசைத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

# The Tradition of Othuvar in Temples - A Cultural Musicology study based on the Saiva temple tradition in Sri Lanka

**Suhanya Aravinthon** [a, *]

[a] Department of Music, University in Jaffna, Sri Lanka
*Corresponding author Email: saravinthon@hotmail.com

DOI: https://doi.org/10.54392/ijot2214
Received: 15-10-2021; Revised: 28-12-2021; Accepted: 30-12-2021; Published: 03-02-2022

**Abstract:** The early Siva community identify the Singing is the easiest way to pray to God and reaching his salvation. From the earliest times in the Saiva tradition, the Nayanmars and Alvars who descended from Karaikkalammaiyar, followed this way and dissolved with the power of God not only this, with the help of history of Saiva we can understand, these Nayanmars and Alvars were not only practice this style of praying in their own life, as well as they insist the community to follow this method of their religious life also. In the Saiva tradition, those who greet the Lord with music are known by the special name of 'Oduvars'. This Oduvar tradition, which originated from Karaikkalammaiyar in the history of Sivasim, has continued in Hindu temples in Sri Lanka up to now. As far as Sri Lanka is concerned, history has maintained a close relationship with Tamil Nadu for a long time in culture, religion, customs and many other social contexts. It would not be an exaggeration to say that even though Sri Lanka has been under foreign rule for a long time, it is the work of these readers to preserve Sivasim and Tamilism and pass it on to the next generation. This article describes the work done by the Oduvars in Jaffna, the place where Saivism flourished in Sri Lanka.

**Keywords:** Oduvars, Devotion, Thirumurai, Tamil Isai, Rendering.

## ஆசிரியர் அறிமுகம்



இலங்கை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே இசைத்துறையிலே முதுநிலை விரிவுரையாளராகப் பணியாற்றிவரும் முனைவர் (திருமதி) சுகன்யா அரவிந்தன் அவர்கள் ஒரு கர்நாடக இசை மேடைக்கலைஞர் என்பதற்கப்பால் சமூகவியல், பரதநாட்டியம் மற்றும் கல்வியியல் ஆகிய துறைகளிலே புலமை பெற்றவர். துறை சார்ந்த ஒரு ஆய்வாளரும் கூட. பல உள்நாட்டு மற்றும் சர்வதேச ஆய்வரங்குகளிலே கலந்துகொண்டு சிறந்த பல ஆய்வுக்கட்டுரைகளை சமர்ப்பித்துவருகின்ற ஒரு இசையியலாளர். 'இசைக்கலையும் ஆசிரியத்துவமும்', 'இசையியலும் ஆய்வியலும்', 'பாரதியார் பாடல்கள் சுட்டும் இசைமரபு' அடங்கலாகப் பல நூல்களை எழுதியிருக்கின்றார்.

## முன்னுரை

இறைவனை இசை வடிவினனாகக் கண்டவர்கள் இந்துக்கள். இறைவனை அடைவதற்கான இலகுவான மார்க்கமாக இசையினை கண்டு உணர்ந்தவர்களும் இந்துக்களே. 'ஓசை ஒலழியெலாம் ஆனாய் நீயே...' என்று இறைவனைப்பாடிப் பரவியவர்கள் சைவர்கள். இறையும் இசையும் ஒன்றெனக்கண்டவன் தமிழன். ஏழிசையாயும், இசைப்பயனாயும் இருப்பவன் இறைவன். பண்ணின் இசையாய் நின்றாய் போற்றி, இசை ஏழுகந்தான், பாட்டகத்து இசையாகி நின்றான் என்பன பல தெய்வ வரிப்பாடல்கள் இசைக்கும் இறைக்கும் உரிய உறவினை வெளிக்காட்டுவதாக இருக்கின்றது. ஆலயத்தின் ஒலி வடிவமே இசை, இசையின் வரிவடிவமே ஆலயம்.

இசையினைத் தோற்றுவித்தவன் இறைவன். ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே, என்று தேவாரப்பதிக வரிகள் இறைவனை இசையாக உணர்த்திநிற்கின்றன.

'வேதங்களாட, மிகு ஆகமம் ஆடக்

கீதங்களாடக், கிளரண்டமேழுமாடப்

பூதங்களாடப், புவனம் முழுதுமாட

நாதங்கொண்டு ஆடினான் ஞானானந்தக் கூத்தே'

என்பார் திருமூலர்.

நாதவடிவானவன் இறைவன். 'நாதம்' என்பதற்கு இன்னொலி என்றும், தலைவனென்றும் பொருளுண்டு. உலகினைப்படைத்துக் காக்கும் இறைவனே, இன்னொலியாக, இசையாக விளங்குகின்றான். தமிழ்ப்பண்பாட்டிலே, தான் வணங்கும் ஒவ்வொரு தெய்வத்துடனும் ஒரு இசைக்கருவியைச் சேர்த்தே வழிபடும் வழக்கமிருந்தது. கலைத்தேவி கரத்திலே வீணை, கண்ணன் கையிலே குழல், முக்கண்ணனிடம் உடுக்கை இவ்வாறு வரிசைப்படுத்திப் போகலாம்.

சோழராட்சிக்காலத்தில் ஆலயங்களில் தேவாரங்கள் ஓதுவதற்காக பணியாட்களை நியமித்தமைகாக்கான சான்றுகளை கல்வெட்டுக்கள் மூலம் பெற்றுக்கொள்ளமுடிகின்றது. மூவரால் பாடப்பட்ட திருத்தலங்களில் அந்தந்தத் தேவாரப்பாடல்களைப் பிற திருமுறைப்பாடல்களுடன் பாடுவதும், அவ்வாறு பாடப்பெறாத ஆலயங்களிலே வெவ்வேறு திருமுறைப்பாடல்களைப் பாடுவதும் வழக்கம். திருஞானசம்பந்தரால் பாடப்பெற்ற தலத்தில், அவருடைய தேவாரப்பாக்களை மாத்திரம் பாடுவதென்ற நிபந்தனை இருக்கவில்லை. பாடல்கள் பாடப்படுவதன் ஒரே சிந்தனை இறைபுகழ் பாடுவதேயாம்.

பலகோவில்களில் பதினாறு வகையான வழிபாடுகள் (உபசாரங்கள்) முடிந்ததும் 'பஞ்சபுராணம்' பாடும் வழக்கம் கடைப்பிடிக்கப்படுகின்றது. ஏழு திருமுறைகளிலிருந்தும் ஏதேனுமொரு தேவாரம், பாடி தொடர்ந்து திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரிய புராணம் ஆகியவற்றிலிருந்து ஒவ்வொரு பாடலைப்பாடி மகுடமிடுவதே 'பஞ்சபுராணம் பாடுதல்' எனப்படும். இன்று சில ஆலயங்களில் புராணத்தைத் தொடர்ந்து திருப்புகழும், வாழ்த்தும் இசைப்பது வழக்கமாக இருக்கின்றது.

திருமுறைப்பாடல்களைச் சைவ ஆலயங்களில். இசைக்கும் 'திருப்பதியம் விண்ணப்பிப்பார்' அதாவது தேவாரம் ஓதும் ஓதுவாமூர்த்திகளுக்கும் மாதாந்திர அல்லது வருடாந்த ஊதியமும், மானியங்களும் பிற கலைஞர்களைப் போலவே அளிக்கப்பட்டுள்ளன. எம்முடைய இசைமரபிலே ஒருவார்த்ததையை எடுத்துக்கொண்டு அதற்கு முன்பாகவுள்ள வார்த்தைகளை ஒவ்வொன்றாகக் கூட்டி, அழகுறப் பாடும் முறையினை இன்றைய இசையரங்குகளிலே சகஜமாகக் கேட்கமுடிகின்றது. இதிலும் பல்லவி, பாடுவதில் இம்முறை பயன்படுத்தப்படும். இது 'கொண்டு கூட்டிப்பாடும் முறை' எனச் சிறப்பித்துக்குறிப்பிடப்படும். இம்முறைக்கு முன்னோடியாக அமைந்தவை தேவாரப்பாடல்களே.

திருப்பதியம் விண்ணப்பிக்கையில், முப்பெரும் இசைக்கருவிகள் என்று போற்றப்படும் வீணை, குழல், தண்ணுமை ஆகியவை துணைபுரிகின்றன. திருநீலகண்ட யாழ்ப்பாணரும், இவரது துணைவியாரும், யாழினை மீட்டிக்கொண்டே திருப்பதிகங்களைப்பாடி வந்தனர். 'இறைவன் தன் சீர்திருத்தகும் யாழிலிட்டுப் பரவுவார்', என்பார் சேக்கிழார். புல்லாங்குழல், மிருதங்கம், ஆர்மோனியம் முதலிய இசைக்கருவிகள் இன்னாளில் உபயோகிக்கப்படுகின்றன. ஆயினும் ஒருகாலகட்டத்தில்

மற்றொரு நரம்பிசைக்கருவியின் துணையோடு திருமுறைப்பாடல்களை விண்ணப்பம் செய்வதென்பது, தமிழகத்தில் இருந்துள்ளது. வட இந்திய இசைமுறையில் சாரங்கி என்றொரு இசைக்கருவி இருப்பது யாவரும் அறிந்த செய்தி. இந்தச் சாரங்கியே முற்காலத்துத் தமிழகத்தில், குறிப்பாக, நெல்லை மாவட்டத்துத் திருக்கோயில்களில் திருமுறைகளைப் பாடுகையில் துணைசெய்திருந்ததென்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

## ஓதுவார் மரபு

திருமுறை ஓதலுக்கும் இலங்கைக்கும் மிக நீண்ட வரலாறு உண்டு. இதிகாச புராண காலங்களிலே குறிப்பிடப்படும் இலங்கை மன்னன் இராவணன் வீணை வித்தகன், சிவ பக்தன், கீதத்தை மிகப்பாடும் செம்மலாக விளங்கினான். இதனையே பக்திநெறிக்காலத்திலே தோன்றிய தேவார மும்மூர்த்திகளுள் இளையவரான திருஞானசம்பந்தர் அவர்கள் திருநீற்றின் மகிமையைப் போற்றிப்பாடும் திருநீற்றுப்பதிகத்தில், 'இராவணன் மேலது நீறு' என்று இலங்கை மன்னனது புகழையும் பெரிதுயர்த்திப் பாடியிருக்கின்றார். இது மட்டுமல்லாமல் 'பண்டையிராவணன் பாடி உய்ந்தனன்' என்று சம்பந்தர் அவர்கள் இராவணனது இசைப்புலமை பற்றித் தனது பதிகத்திலே குறிப்பிட்டிருக்கின்றார். அதாவது இலங்கை வேந்தன் இராவணன் இறைவனைப் போற்றிப்பாடி வாழ்ந்திருக்கின்றான் என்பது இதனின்றும் தெளிவாகின்றது (Sambandar, 1985).

மேலும் தேவார மும்மூர்த்திகளால் பாடப்பட்ட திருத்தலங்களாக திருக்கேதீச்சரமும், திருக்கோணேச்சரமும் திகழ்வதும், பின்வந்தகாலங்களிலே சந்தப்பாவலர்பெருமான் அருணகிரிநாதர் அவர்களால் இலங்கையிலே இருக்கக்கூடிய கதிர்காமம், திருகோணமலை, யாழ்ப்பாணம் போன்ற திருத்தலங்களில் உறைந்திருக்கும் முருகப்பெருமான் மேல் புகழ் பாடியிருப்பதும் அவர்களது பாடல்களின் வழி அறியமுடிகின்றது. எனவே அந்தக்காலங்களிலும் 'பண் பாடுவது' என்பது இலங்கையிலும் வழக்கிலிருந்த ஒரு விடயமாகத் தெரிகின்றது. இறைவனை இசையோடு போற்றித் துதித்து இசை ஓதி வழிபாடாற்றுபவர்களே ஓதுவார்கள். ஓதுவார்களது பணிக்கு முன்னோடியாக இருந்தவர்கள் பாணர்கள். யாழொடு பண்ணிணைப் பாடி இசையால் அர்ச்சனை புரிந்தவர் பாணர். யாழ்ப்பாணத்திலே பூர்வீக குடிகளாக பாணர் இருந்தனர் என்று சொல்லப்படுகின்றது. (யாழ் கொண்டு இசைமீட்டி அரசன் புகழ்பாடி 'மணற்றி' என்கின்ற இடத்தினை கவிவீரராகவன் பரிசாகப்பெற்ற பின் இந்த மணற்றி, யாழ்ப்பாணம் என்று அழைக்கப்பட்டது. இவன் வழியானோர் யாழ்ப்பாணத்திலே வசித்தனர். இவர்கள் 'பாணர்' என்று அழைக்கப்பட்டனர் (Vaiyapuri Iyer, 1980).

எனவே இதன் வழி பண்பாடுவதற்கும், யாழ்ப்பாணனுக்கும் தொன்று தொட்டு உறவு நிலை தொடரப்பட்டுவருவது தெளிவாகின்றது.

திருமுறைகளைக் காத்து அதனைக் கோயில்களிலே வழிபாட்டின் போது பாடச் செய்வித்த பெருமை சோழப் பெருமன்னர்களையே சாரும். எவ்வாறு இந்தியாவிலே கோயில்களில் ஓதுவார்களால் தேவாரம் ஓதப்படும் மரபு காணப்பட்டதோ அவ்வாறே இலங்கையிலும் திருமுறைகள் ஓதப்பட்டு வந்தன.

இவ்வாறாக இலங்கையிலே வளர்ந்த பண்ணிசை மரபானது கி.பி 16, 17ம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட ஆட்சி மாற்றங்களினால் சற்றுப் புறந்தள்ளப்பட்;டிருந்தாலும், கி.பி 18 19ம் ம் நூற்றாண்டிலே ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், சேர் பொன் இராமநாதன், சுவாமி விபுலானந்தர் அவர்களது அரும்பணியால் மீளவும் திருமுறை இசை புத்துயிர் பெற்றது.

நாவலர் அவர்கள் திருமுறைப் பாராயணத்துக்காக செய்த சேவைகள் அளப்பரியன. இவரது திருப்பணிகள் பற்றி இவரது மறைவின் போது தமிழறிஞர் தி. வை. தாமோதரம்பிள்ளை அவர்களால் அளிக்கப்பட்ட இரங்கற்பாவிலே 'நல்லை நகர் நாவலர் பிறந்திலரேல்; சொல்லு தமிழெங்கே, சுருதியெங்கே, புராண ஆகமங்கள் எங்கே' (Arumuka Navalar et.al., 1950).

கி பி 1874ஆம் ஆண்டிலே 'கந்தசுவாமி கோயிற்றிருவிழா சமீபித்தபடியால் தேவாரத்திருக்கூட்டச் சிறப்பையும், தேவாரம் முதலியவை திருவிழாக்காலத்திலே சுவாமிக்குப்பின்னாக ஓதுவதால் சனங்களுக்குண்டாகும் கடவுட் பக்தியையும், இவ்வியாழ்ப்பாணத்துச் சனங்களுக்குக் காட்ட நினைந்து, திருவாவடுதுறையினின்றும் ஓதுவார் சிலரை அழைப்பித்து, திருவிழாக்காலத்திலே அவர்களுக்கும்

இங்குள்ள மற்றைச் சைவர்களுக்கும் தெற்கு வீதி மடத்திலே புண்ணியவான்கள் சிலரைக்கொண்டு மாகேசுர பூசை செய்வித்து, சுவாமி வீதியிலே உற்சவங்கொண்டருளும்பொழுது, சுவாமிக்குப்பின்னாக அவர்களைக்கொண்டு தேவாரம் ஓதுவித்துக்கொண்டு வந்தார். இவர்கள் தமிழ் வேதமாகிய தேவாரத்தை ஓத, அதனைக் கண்ட பிராமணர், தாங்களும் வந்து சுவாமிக்குப்பின்னாக வேதம் ஓதுவாராயினர். ஆவரம் விபூதி உத்தூளனஞ் செய்து, திரிபுண்டரம் தரித்து, தலையிலே சிர மாலையும், கழுத்திலே கண்டிகைளும் கையிலே பௌத்திரமம் தரித்து, யாவருக்கும் பக்தியை விளைவிக்கத்தக்க வகையிலே சிவவேடப்பொலிவோடு திருக்கூட்டத்தலைவராய் நின்றார். அத்திருக்கூட்டத்தின் சிறப்பை என்னவென்று சொல்வோம்! எதற்கொப்பிடுவோம்!! ஆதியிலே சுப்பிரமணியப் பெருமானின் அவதாரமாய் விளங்கிய திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் 16000 திருக்கூட்டத்தோடு தோற்றிய சிறப்பிற்கொப்பிடலாம்' என்கின்ற வே. கனகரத்தின உபாத்தியாயர் அவர்களால் எழுதப்பட்ட 'ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுகநாவலர் சரித்திரம்' என்கின்ற நூலிலே காணப்படுகின்ற தகவல்கள், திருமுறை வளர்ச்சிக்காக ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் ஓதுவார்களை போதத்தவாற்றையும்; அவர்களுக்கு ஆற்றிய பணிகளையும் ஆதாரபூர்வமாக எடுத்தியம்புவனவாக இருக்கின்றன. யாழ்ப்பாண நல்லூர் ஆலய திருமுன்றலில் தன் பொருட் செலவிலே தேவாரப் பாடசாலை ஒன்றை அமைத்தார். இங்கு ஓதுவா மூர்த்திகளைத் திருவாவடுதுறை ஆதீனத்தினின்றும் வரவழைத்து. அவர்கள் தங்கியிருந்து பணி செய்வதற்கேற்ற வசதிகள் செய்தமை பற்றியெல்லாம் மேற்படி நூலின் வாயிலாக தெரிந்துகொள்ள முடிகின்றது (Arumuka Navalar, 1996).

விபுலானந்தர் அவர்கள் பண்ணிலே ஆராய்ச்சிகளை மேற்கொண்டு 'யாழ்நூல்' எனும் அரிய இசை ஆய்வுநூல் ஒன்றினை எழுதியவர். இவரே மட்டக்களப்பிலே இசைக்கல்லூரிக்கும் அடித்தளமிட்டுக்கொடுத்தார்.

1931ல் இசை ஆர்வலர்களால் ஆரம்பிக்கப்பட்ட வட இலங்கை சங்கீத சபையினராலும், சேர் பொன் இராமநாதன் அவர்களின் சிந்தனை வழி ஆரம்பிக்கப்பட்ட யாழ்ப்பாணம் இராமநாதன் நுண்கலைக்கழகத்திலே பண்ணிசை ஒரு துறையாக இன்றும் போதிக்கப்படுகின்றது.

கிபி 20ம் நூற்றண்டின் ஆரம்ப கால கட்டத்திலே தென்னிந்திய ஓதுவார்களுடைய தொடர்பு அதிகமாக இலங்கைக்குக் கிடைத்தது.

இலங்கையிலிருந்து பலரும் தமிழகம் சென்று அங்கிருந்த சிறந்த ஓதுவார்களிடத்திலே சிறந்த பயிற்சி பெற்று மீண்டவர்களுள் காசி வாசி செந்திநாதையர் (சுப்பிரமணிய ஓதுவார் மூர்த்தி), கொக்குவில் குமாரசாமிப்பிள்ளை 1895 - 1987 (திருவாவடுதுறை ஆதீனம்), குப்பிளான் செல்லத்துரை, 1909 - 1968 (திருவாவடுதுறை ஆதீனம்) தாவடி எஸ்.ராசையா 1912 - 1975 (தமிழ்நாடு கல்யாண சுந்தரதேசிகர்), கீரிமலைச் செல்லையா (1889) (சென்னை இராகவ முதலியார்), கட்டுவனூர் வி.ரி.வி சுப்பிரமணியம் (இராஜராஜசேகரன் ஓதுவார்) போன்றோர் குறிப்பிட்டு சொல்லத்தக்கோர் ஆவர்.

இவர்களுள் காசிவாசி செந்திநாதையர் முதன்மையாகக் குறிப்பிட்டுக் கூறப்பட வேண்டியவர். இவர் நாவலரவர்களின் மாணவன.; நாவலரவர்கள் திருமுறை ஓதுவதற்குப் பண்முறை மிகவும் அவசியம் எனக் கண்டு, தமிழ் நாட்டில் பண்ணிசையில் பெரும் புகழ் பெற்றிருந்த சுப்பிரமணிய ஓதுவாமூர்த்தி அவர்களையும்; அவர் தம் கூட்டத்தினரையும் இங்கே அழைத்துப் பணி செய்யுமாறு வசதி செய்து கொடுத்தார்.

சுப்பிரமணிய ஓதுவார் பண்ணுக்கேற்ப சாரங்கி என்னும் வாத்தியமும் மீட்டிப் பாடவல்லவர். எனவே தம் மாணவனையும் அவ்வாறே பயிற்றுவித்ததன் பயனாக காசி வாசி செந்திநாதையரும் பண்ணோடு சாரங்கியையும் மீட்டிப்பாட வல்லமை பெற்றிருந்தார் (Kasivasi Senthinathiyar et.al., 2008).

இவ்வாறு வளர்ந்த ஓதுவார் மரபினை இலங்கையிலே குறிப்பாக யாழ்ப்பாணத்திலே வளர்த்து போற்றிப் பாதுகாத்த பெருமை வீரசைவ குலத்தவரையே சாரும். இலங்கை தமிழ் கலை வடிவங்கள் பற்றி நீண்ட காலமாக ஆய்வுப் பதிவுகளை மேற்கொண்டு வந்த திரு.க. சண்முகசுந்தரம் அவர்கள் தனது 'இசையும் மரபும்' எனும் நூலிலே குறிப்பிடும்போது, பிரித்தானியஆட்சி இலங்கையிலே நிலவிய போது கலைகளுக்கு ஆதரவு நிராகரிக்கப்பட்டிருந்தது. 'அந்தக் காலத்திலே பொதுமக்களோடு ஒட்டி உறவாடி வாழ்ந்து இசைக்கலைக்குத் தொண்டு செய்தவர் இருசாரார். இந்த இரண்டுசாராரும் இலங்கைக் கலை வாழ்வில் இரண்டு கண்போன்றவர்கள். இங்கு குறிப்பிடுகின்ற இரு சாரார்,

நாகசுரக்கலைஞரும், வீரசைவர் குலத்தில் வந்த கலைஞருமாவார். இந்த இரண்டு சாராரும் இல்லாவிட்டால் இன்று ஈழத்துக் கலைவயலுக்குப் பதிலாகக் கட்டாந்தரை ஒன்று உருவாகியிருக்கும்' என்று குறிப்பிடுவதிலிருந்து இசை வேளாளர்களும், வீரசைவ மரபினரும் இலங்கைக்கலை வளர்ச்சியிலே முக்கிய பங்காற்றியிருக்கினறார்கள் என்பதனை ஆதாரபூர்வமாகத் தெரிந்து கொள்ளமுடிகின்றது. மேலும் திருமுறைகளை மக்கள் மத்தியிலே வழக்கப்படுத்திய வீரசைவ மரபினரைப் பற்றி திரு க சண்முகசுந்தரம் அவர்கள் தனது; இசையும் மரபும் என்கின்ற நூலிலே பேசும் போது, "பண்ணிசையைப் பரப்பியவர்கள் இவர்கள், தேவாரம், திருவெம்பாவை, திருப்புகழ், எல்லாவற்றையும் வீதி தோறும் பரப்பியவர்கள் இவர்கள்" என்றவாறு குறிப்பிட்டு நிற்கின்றார்.

அதாவது வீரசைவர்கள் பண்ணிசையை சமூகமயப்படுத்துவதிலே முக்கிய பங்காற்றியிருக்கின்றார்கள் என்பதனை உறுதியாகச் சொல்கின்றார். வீரசைவர்கள் எல்லோருமே பண்பாட வல்லவர்களாக இருந்தனர். பண்ணிசைப் பேராசன் கீரிமலை தம்பையா செல்லையா அவர்கள் தனது வாழ்க்கைக் குறிப்பிலே கூறும்போது, 'நாங்கள் வீரசைவ பரம்பரையைச் சேர்ந்தவர்கள். எங்களுக்குத் தொழில் பூசையும் கலையுந்தான். கோயில்களுக்குப் பூசை செய்வோம். தமிழ்ப்பண்ணிசை, கூத்து, காவடி, கரகம், சோடனை எல்லாம் வீரசைவர் வளர்த்த கலைகள். இந்தக்கலைச்சூழலிலே தான் நான் பிறந்து வளர்ந்தவன். பிறந்த ஆண்டு சரியாக நினைவிலில்லை, எனக்கு வயது 85 இருக்கலாம்' என்று இவர் கூறியிருப்பது வீரசைவ மரபினர் இலங்கையிலே ஆலயச்செயற்பாடுகளோடு மட்டும் நின்றுவிடாது திருமுறைகளை சமூகமயப்படுத்துவதிலும் வளர்ப்பதிலும் முக்கிய காரணமாகி இருந்திருக்கின்றார்கள் என்ற முடிவுக்கு வரமுடிகின்றது. அவரது வாழ்க்கைப் பதிவு இதற்கு சிறந்த சான்றாயமைகிறது.

இவ்வாறு இலங்கையிலே வழக்கத்துக்கு வந்த பண்ணிசையானது 1950களில் சுதந்திரத்தின் பின்னர் மன்றங்களாலும், ஆலய சபைகளாலும் வகுப்புக்கள் நடத்தப்பட்டு மக்கள் மத்தியிலே திருமுறைப் பாடல்களைப் பரீட்சயப்படுத்தும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன.

1960களில் இலங்கை, இந்திய போக்குவரத்தில் ஏற்படுத்தப்பட்ட கட்டுப்பாடுகள் தென்னிந்திய ஓதுவார்களின் வருகையில் பின்னடைவை ஏற்படுத்த, இங்கிருக்கக் கூடியவர்களே இந்த பணிகளைச் செய்து வந்தனர். இசை பயிலவென தென்னிந்திய அண்ணாமலைப்பல்கலைக்கழகம் சென்ற பலர் பண்ணிசையையும் முறையோடு பல்கலைக்கழகத்திலோ, அன்றி ஓதுவார்களிடத்தில் தனிப்பட்டமுறையிலோ கற்று இலங்கை மீண்டனர்.

இன்று பாடசாலை மட்டத்திலே சமய பாடங்களில் ஒரு பகுதியாகவும், பல்கலைக்கழகங்களிலே சிறப்பாகப் பயிலக்கூடிய ஒரு பாடமாகவும் பண்ணிசை நடைமுறையில் இருப்பதுடன், அகில இலங்கை திருமுறை மன்றம், சைவ மங்கையர் கழகம், வட இலங்கை சங்கீதசபை, இந்து மாமன்றம் இந்து கலாசார அமைச்சின் கீழ் இயங்கக்கூடிய அறநெறிப் பாடசாலைகள் போன்ற நிறுவனங்கள் பண்ணிசை வகுப்புக்களை நடத்தி வருகின்றமை இங்கு குறிப்பிட வேண்டிய ஒரு விடயமாகும்.

## முடிவுரை

தொகுத்து நோக்கும் பொழுது நாயன்மார்களது வழிப்படுத்தலிலே தோற்றம்பெற்ற ஓதுவார் மரபானது இறை புகழ் பாடுதல் என்பதற்கப்பால் காலத்திற்குக்காலம் சமூகத்திற்குத் தேவையான வழிகாட்டுதல்களை மேற்கொண்டு வந்திருக்கின்றது என்பது இந்தக்கட்டுரை வாயிலாகத் தெளிவுபடுத்துகின்றது.

ஓதுவார்மரபு இன்றும் யாழ்ப்பாண ஆலயங்களிலே பேணப்பட்டு வருகின்றது என்கின்ற உண்மையினை மேற்படி கட்டுழரை வாயிலாகத் தெரிந்துகொள்ளமுடிகின்றது. இது மாத்திரமல்லாமல் சமகாலத்திலே பண்பாட்டு மாற்றங்களுக்கேற்ப ஓதுவார் மரபானது சற்று மாற்றம் பெற்று சமூக விரிவாக்கம் பெற்று எல்லோரையும் சென்றடையக்கூடிய வகையிலே நிறுவனமயப்படுத்தப்பட்டிருப்பதும் இந்தக் கட்டுரைவாயிலாகத் தெளிவாகின்றது.

## References

Arumuka Navalar, (1996) Prapanthatthirattu, Department of Hindu Cultural Affairs, Jaffna, Sri Lanka.

Arumuka Navalar, Saivaperiyar Sivapathasundaranar, Erampamurthy, Y., (1950) Tamilmozhlipeyarppu, Bharathi Pathippagam, Jaffna, Sri Lanka.
Kasivasi Senthinathiyar, Vittuvaciromani, Ganesha Iyer, C., Kularatnam, K., C., (2008) ilangai sudar manigal, Kumarn book house, Chennai, India.
Sambandar, (1985) Thevaram, Kalaga veliyedu, Chennai, India.
Vaiyapuri Iyer, (1980) Vaiyapadal, Colombo Tamil Association, Colombo, Sri Lanka.

## Funding

No funding was received for conducting this study.

## Conflict of interest

The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

## About the License

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

## Cite this Article

Suhanya Aravinthon, The tradition of Othuvar in temples - A Cultural musicology study based on the Saiva temple tradition in Sri Lanka, Indian Journal of Tamil, 3(1) (2022) 21-26. https://doi.org/10.54392/ijot2214